உ

சிவமயம்



பாழ்ப்பாணம் அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் சின்னையா சிவானந்தம்

(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், இறப்பர் கூட்டுத் திணைக்களம்)

அவர்களின் பிரிவு குறித்த

# நினைவு மலர்

## 29.01.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்




குடும்பத்தின் சுடர் ஒளியாய்
அன்பின் பெட்டகமாய்
பண்பின் பொக்கிஷமாய்
பாசம் கருணையின் இருப்பிடமாய்
சிறந்த நிர்வாகியாயிருந்து
எமது குடும்பத்தை
உன்னத நிலையில் வைத்து
மறைந்து சென்ற எம் தலைவனின்
பாதாரவிந்தத்தில்
இந் நினைவுமலரைச்
சமர்ப்பிக்கின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்

# சின்னையா சிவானந்தம்

மலர்வு
20.07.1934

உதிர்வு
31.12.2011

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டுகர மார்கழித் திங்கள் பூர்வமதைத்
தீண்டு ஸப்தமிக்கே சென்றடைந்தான் - நீண்டபுகழ்
தூயன் சிவானந்தம் சிவன் மாதுமைக்காம்
நேயன் மலர்த்தாள் நினைந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

விநாயகனை வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனை வேட்கை தனிவிப்பான் – விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனந்து.

## தேவாரம்

### திருத்தாண்டகம்

நிலை பெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்கும்
புலவர்தன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டும்
பூமாலை புனைந் தேத்தி புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சய போற்றி போற்றி யென்றும்
அலைபுனல் சேர் செஞ்சடையெம் ஆதியென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பாவநா சாஉன் பாதமே யல்லால்
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
தேவர்தந் தேவே தேவே சிவபுரத் தரசே
திருப் பெருந்துறை சிவனே
மூவுல குருவ இருவர் கீழ் மேலாய்
முழங்கழ லாய் நிமிந்த் தானே
மாவுரியானே வாழ்கிலேன் கண்டாய்
வருக என் றருள்புரி யாயே.

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண் உடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேரிவில் வீரா
ஆறணி சடை எம் அற்புதக் கூத்தா
அம்பொன் செய் அம்பலத் தரசே
ஏறணி கொடிஎம் ஈசனே உன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசையே.

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல் லாம் விளங்க
அன்ன நடை மவான் உமைகோன் அடி
யோமுக் கருள் புரிந்து
பின்னைம் பிறவியறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு
வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்பு உண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆகும் போது உன்
அடியின் கீழ் இருக்க என்றார்

## திருப்புகழ்

சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலம் துஞ்சித்திரியாதே
கந்தனென் றென்றுற்று நினை நாளும்
கண்டு கொண்டன்புற் றிடுவேனோ
தந்தியின் கொம்பைப் புணர்வோனே
சங்கரன் பங்கிற் சிவபாலா
செந்நிலங் கண்டிக் கதிர் வேலா
தென்பரம் குன்றின் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உழவிக்குள பிள்ளையார்



உழவிக்குளம் தனையே
இருப் பிடமாய்க் கொண்டவரே
மருப்பு தனை ஒடித்தே
மகா பாரதம் எழுதியவரே
விருப்பு உற்றே தினம்
வேண்டி வணங்கிய பக்தனும்
இருப்பிடம் ஆயே உன்னடி
ஏகிய உத்தமரைக் காருமையா!

## சந்நிதிக் கந்தன் துதி



சந்நிதிக் கந்தனே சாருமதி மைந்தனே
எந்நிதியும் தருவாயே எழிற் கோல வேலவனே
இந்நிலம் போற்றிடும் இன்பத்தமிழ்க் குமரனே
இருமாதர் புடைசூழ இன்னல்கள் நீக்கிடுவாய்
வந்துன்னை வணங்குவர் வாழ்வில் வளம் பெற்றிடுவர்
வன்னமயில் வாகனா வல்லமை அளிப்பவனே
எந்நேரமும் உனை எண்ணியே தொழுதேத்தும்
இலட்சுமியம்மை பரகதி பெற பார்த்தருள்வாயப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அச்சுவேலி அம்மன்



அச்சுவேலி தனிலே
நலந்தர வந்த நாயகியே
உருகி என்றும் வணங்கி
உன்னடி வந்தவரை காருமம்மா
இறுதி வரை க்குமே
உன் நாமத்தையே உரைத்தவர்
உறுதி பெற்ற உன்னடி
உவப்புடன் கான வந்துள்ளார்.

## மகிழடி வைரவர் துதி



அரசடி வைரவரே அருளாட்சி புரிபவரே!
கரமதில் சூலமேந்தி காவல் செய்யும் தெய்வம் நீயே!
பரமனை மதித்திடாப் பங்கயன் ஒரு தலையை
பறித்தவனே! காக்கும் வகை பரவுதல் கடவுள் நீயே!
வரமெலாம் கொடுத்தருளும் வடுக நாதன் நீயே அப்பா
வாடிவரும் அடியவர்க்கு வலிமையும் தருபவனே
இரவு பகல் வேளை தோறும் நின்னையே பூஜித்திருந்த
இலட்சுமிப் பேருடையாள் சித்தி பெற அருள்செய்வாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதிரேசு சின்னையா சிவானந்தன்

## A SHORT HISTORY

20.07.1934 இல் அச்சுவேலியில் சின்னையா - செல்லம்மா தம்பதியர்க்கு ஒரே பிள்ளையாகப் பிறந்து செல்லமாக வளர்ந்து அவரது சிறு வயதில் தாயாரை இழந்து (செல்லம்மாத்தாய் எங்கள் ஐயாவுக்குக் காசு குடுத்துப் போய் இனிப்பு வாங்கித் தின் என்று சொல்லிக் கடைக்கு அனுப்பிவிட்டு அய்யா கடைக்குப் போனபின் தாத்தாவுடன் இருந்த கருத்து வேறுபாட்டுப் பிணக்கால் தன் கழுத்தைத் தானே அறுத்து மரித்தாரம் அந்தத் தன் மானமுள்ள பாசக் கிழவி...) அதன் பிறகு நடந்த வழக்குக் கதைகளும் சொன்னார் எமது அய்யா.

அதன்பின் தந்தை பராமரிப்பில் வளர்ந்து அச்சுவேலி மத்திய மகா வித்தியாலயம் என்று தற்போது அழைக்கப்படும் அப்போதைய ஆங்கிலேயர் நிர்வாகத்தில் இருந்த ''ATCHUVELY CHRISTIAN COLLEGE'' இல் தனது கல்வி அறிவைப் பெற்று சிறு பராயத்திலேயே தந்தையார் வற்புறுத்தலில் பரம்பரைத்தொழிலான நகைத் தொழிலையும் கற்று, அதன் பிறகு கிடைத்த சிறு நேரத்தில் எமது தாத்தாவுக்குத் தெரியாமல் வீட்டிலும் கல்வி கற்றாராம் (அய்யாவின் மாமனாரான எமது தருமலிங்க அப்பா பகிடி பண்ணுவார்... உன்னுடைய கொய்யா அவனுடைய அய்யாவுக்கு ஒழித்து ஒழித்துப் படிப்பான் '.. நீ என்னடாண்டால் படிக்கிறதுக்கு கொய்யாவுக்கு ஒழிக்கிறாய் என்று...)

படித்து முடிக்குமுன்னரே அவரை வேலை வாய்ப்புத் தேடிவர தலை நகர் கொழும்பில் அமைந்திருக்கும் " CEYLON RUBBER CONTROL DEPARTMENT" இல் CHIEFCLERK ஆக வேலையைத் தொடங்கினார்.

BORELLA இல் தங்கி இருந்து வேலை செய்து கொண்டு இருந்த போது 1956 இல் கொழும்பில் நடந்த கலவரத்தில் அகப்பட்டு நல்ல மனம் படைத்த சிங்களவர்களால் காப்பாற்றப்பட்டார்.

அதன்பிறகு அவருக்குக் கல்யாணக் களை வர அவரது 23 ஆவது வயதில் 1957 ஆம் ஆண்டு கல்யாணப் பேச்சுக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பமாகி, பருத்தித்துறையில் இருந்து அழகு ராணி ராசையா ஜெயலட்சுமியின் ஜாதகத்துடன் பொருந்த இருவருக்கும் கல்யாணம் PROPOSED ஆகி ஐந்து வருடங்களாக ஒருத்தரை ஒருத்தர் புரிந்து 1962 ஆம் வருடம் திருமணம் நடந்தேறியது. அடுத்த வருடம் 1963 இல் முதல் மகன் செல்லமாறன் பிறந்தார்.

வேலை நிமித்தமாக கொழும்பிலே BORELLA இல் குடும்பத்துடன் தங்கி இருந்து வேலை பார்த்தார். அதன் பிறகு மகள் மாதங்கி 1966 இல் பிறந்தார்.

அதே சமயத்தில், அவர் J KRISHNAMURTY அவர்களின் கருத்துக்களையும் பின்பற்றினார்.

[ ("Truth is a pathless land". Man cannot come to it through any organization, through any creed, through any dogma, priest or ritual, not through any philosophical knowledge or psychological technique. He has to find it through the mirror of relationship, through the understanding of the contents of his own mind, through observation and not through intellectual analysis or introspective dissection.)

இலகுவில் சொன்னால் "உண்மை" வழிப்பாதைகளே இல்லாத ஒரு நிலம். மனிதன் அதனை உணர வேண்டுமென்றால் தன் சுய மனதில் உள்ளடங்கியவற்றை உன்னிப்பாக அவதானிப்பதன் மூலம் புரிந்து கொள்ள வேண்டும். அதைவிட்டு அவற்றை தத்துவ ரீதியாகவோ அல்லது அதி புத்திசாலித்தனத்தாலோ புரிந்து கொள்ள முடியாது")

மகன் இளந்திரன் 1970 ல் பிறந்து இருந்த போது கட்டடக்கலையில் உள்ள ஆர்வத்தினால் பகுதிநேரமாக ARCHITECTURE பயின்றார். இயற்கையிலேயே இருந்த வரை கலை உணர்வால் வரைதலையும் தொடர்ந்தார். (அவரது ஓவியங்கள், ஆக்கங்கள் பிந்திய 1990 களின் இடம்பெயர்வின் போது காணாமல் அல்லது அழிந்து போய்விட்டன)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் அவர் இலங்கையில் தயாரிக்கப்பட்ட திரைப்படமான நிர்மலாவுக்கு ஒப்பனைக் கலைஞராகவும் இருந்தார். தொடர்ந்து RADIO CEYLON இற்காக அச்சுவேலியின் நாடகக்கலைஞர் ஜெகசோதி அவர்கள் எழுதித் தயாரித்த நாடகங்களில் சிலவற்றில் நடித்தும் ஒப்பனையும் செய்திருந்தார்.

தனது ஓய்வு நேரத்தில் நாடகமும் எழுதி இருந்தார். பொறி, என்ற அவரது நாடகம், LONDON மாநகரில் 25 NOVEMBER 1952 இல் தொடங்கி 70 வருடங்களுக்கு மேலாக அரங்கேறிக்கொண்டிருக்கும் Agatha christie என்ற புகழ் பெற்ற துப்பறியும் நாடக எழுத்தாளரின் கை வண்ணத்தில் உருவான ''THE MOUSETRAP'' ஐப் பின் பற்றியதாக இருந்தது.

மகள் தார்மிகா 1976 இல் பிறந்திருந்தபோது நாட்டில் நடந்த கலவரத்தால் 1977 இல் வேலையைப் பிள்ளைகளுக்காக முன்னராகவே RETIRE பண்ணி அச்சுவேலிக்குக் பறக்க நேரிட்டது.

அதனைத்தொடர்ந்து அச்சுவேலியில் அவர் தானே வடிவமைத்துக் கட்டிய தனது வீட்டிலேயே தான் சிறு வயதில் பழகி இருந்த நகைக் கலைத் தொழிலைத் தொடர்ந்து செய்யத்தொடங்கினார்.

களிமண் சிலைகள் செய்வதிலும் அவர் காட்டிய ஆர்வத்தினால் பெரிய அளவிலான ஒரு சிலை முதலை ஒன்றின் வாயை வேட்டை ஆடுபவன் இரண்டு கைகளாலும் கிழிக்க அந்த முதலை வேடனின் முதுகில் தன் வாலால் விசுக்கி அடிப்பது மாதிரி செய்திருந்தார்.

அதோடு சிக்கன அடுப்பு ஒன்றையும் மறு வடிவமைத்து செய்திருந்தார் (ஒரு மூட்டலில் நான்கு அடுப்புகளை ஒரே நேரத்தில் உபயோகப்படுத்தக்கூடியதாக)

இவை இவ்வாறு இருக்க அவரது கடைக்குட்டி மகள் சௌந்தரி 1986 இல் பிறந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின்னர் குடும்பமாக 1998 ஆம்ஆண்டில் தமிழ் நாட்டில் சென்று தங்கி இருக்க நேரிட்டது. இந்தியாவின் தமிழ் நாட்டு சென்னையில் பெரம்பூரிலும் மைலாப்பூர் அருகில் மந்தைவெளி என்ற இடத்தில் 2002 ஆம் ஆண்டு வரையும் இருந்த காலங்களில் குறும் படத்தயாரிப்புத்துறையில் இருந்த ஆர்வத்தால் அதனையும் கொஞ்ச காலமாக கற்றார். அத்துடன் வீணை வாத்தியத்தையும் பயின்றார். அத்தோடு J KRISHNAMURTI இன் கருத்துகளைத் தொடர்ந்து ஆர்வத்துடன் சென்னையில் உள்ள RAMA KRISHNA MISITON இக்கு சென்று கேட்டுவந்தார்.

2003 இல் குடும்பத்துடன் அச்சுவேலிக்குத் திரும்பிவந்து அவரது வாழ்க்கையைத் தொடர்ந்தார். இவற்றிற்கிடையே புத்தூர், வரணி போன்ற பிரதேசங்களில் யுத்த பாதிப்பிற்குள்ளான மக்களிற்கு தமது மாமனாரான திரு. இரத்தினசாமியுடன் சேர்ந்து பல உதவிகளைப் புரிந்துள்ளார்.

" குழலினிது யாழினிது என்பர் மழலை மொழி தனைக் கேழாதவர்" என்பதற்கமைய யார் எவர் எக் குழந்தையாகிலும் அன்பினை அரவணைப்பினை அள்ளிக் கொடுத்து மகழும் வஞ்சமில்லா மனத்தனன்.

தனது தலை மகனான செல்லமாறனுக்குக் குமுதாவுடன் 1998 இலும், 2002 இல் மூத்த மகளான மாதங்கிக்கு திரு சுந்தரலிங்கத்துடனும், மகன் இளந்தீரனுக்கு 2004 இல் தர்மிகாவுடனும் மகள் தார்மிகாவுக்கு 2005 இல் சுரேஷ்கண்ணாவுடனும் திருமணம் செய்து வைத்தார்.

அவர்கள் மூலமாக சௌமியா, சௌயனா, ஷானுயா, ஆர்த்தி, பொழில், ஜினித்ரா, பிரயோதயன் மற்றும் ஆரி என 8 பேரப்பிள்ளைகளைக் கண்டிருந்தார்.

அதன் பிறகு நடந்த அசம்பாவிதத்தின் காரணத்தால் அவர் படிப்படியாக அவரது நினைவுகளை இழந்து வந்து கொண்டிருந்தார். வைத்தியம் சரி வராமல் போய் சில காலம் இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகளின் இதய ஒலி

அன்று நான் சிறுவனாக - உங்கள்
வேலைத் தளம் அழைத்துச் செல்லுகையில்
நான் செய்யும் குறும்புகளால் மனங்கோணாத ஐயா
சக ஊழியர் நட்பிலே நல்ல நண்பனாய்
கேட்டதை வாங்கித் தந்து
அன்பையும் பண்பையும் நல் உபதேசங்கள்
அள்ளித் தந்து பல்கலையின் குருவாய்
நல் நண்பனாய் நீங்கள்......
பகிடியாய் விரட்டி என்றுமே அடிபோடா ஐயா
கம்பீர தோற்றமதிலே மென்மனதுடைய இனிய தந்தையே
நான் வாழும் டென்மார்க்கனை சுற்றிக்
காட்ட முடியவில்லையே என்னால்...
கேட்கும் தினமெல்லாம் அம்மா
திடகாத்திரமாக வரட்டும் எனக் கூறி
இங்கு வராமலே சொர்க்கம் சென்றீர்களே ஐயா.....

மூத்த மகன்
(மாறன்)

குடும்பத்தின் குல ஒளியாய்
அன்பைக் கொடுக்கும் அமுத சுரபியாய்
அறிவைப் புகட்டும் ஐயாவாய்
நல்வழி காட்டும் நல்லாசானாய்
இல்லற வாழ்வில் அம்மாவுக்கு உறுதுணையாய்
பேரப்பிள்ளைகளின் பேரன்புத் தாத்தாவாய்
உற்றார் உறவினர்க்கு உற்ற நண்பனாய்
வாழ்ந்த ஐயாவே உங்களை மறவோம் என்றென்றும்
உங்கள் ஆத்மா சாந்தியடையட்டும் .......

மாதங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அய்யா - அட்சய பாத்திரம்

எல்லையே இல்லாத அன்பையும்
ஆழமே தெரியாத பாசத்தையும்
நேரமே ஒதுக்காமல் நேசத்தையும்
பெறுமதி மதிக்கா அறிவையும் - தந்து
கருணையுடன் எம்மை அரவணைத்து
கடிந்து கொள்ளாமல் கண்டித்து
நண்பனில் நண்பனாய் நட்புடனும்
தீர்க்கதரிசனத்துடன் ஆசானாயும்
அள்ளி வழங்கிய அட்சய பாத்திரமாய்
நீங்கள் இருந்தபோது - அய்யா
அள்ள முடியவில்லை என்னால் - அதையும்
நினைத்துக் குமுறி அழுகிறேன் - உள்ளே
வெளிக்காட்டத் தெரியவில்லை எனக்கு
அதுவும் அய்யா பழக்கி விட்ட பழக்கமே
என்றும் நீங்கள் நிறைகுடமாய் - உங்கள்
ஆத்மா சாந்தி அடையட்டும்.....

" நின் பிள்ளைகள் நாம் பிழைகள் இழைத்திருந்தால்
கண்ணீருடன் கேட்கிறோம் எப்பவும் போலவே மன்னித்து விடுங்கள்.
பாசமிகு எங்கள் அய்யாவே!!"

**மகன் தீரன்**

தந்தையென்ற சொல்லிற்கு இலக்கணம் நீ
அன்பென்ற சொல்லிற்கு அடைக்கலம் நீ
பண்பென்ற சொல்லிற்கு உறைவிடம் நீ
கண்போன்று குடும்பத்தைக் காத்தாய் நீ
மழை போன்று அன்பைக் பொழிந்தாய் நீ
பல கலையுமறிந்த பல்கலைக்கழகம் நீ
எம்மைவிட்டு சென்றாயோ?
உன் நினைவால் ஐயா அலைகடல்
துரும்பாகத் தவிக்கிறோமே .....

தார்மிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயுள்ளம் கொண்ட தந்தையாகி
தம் செல்வங்களாக நம்மை யெண்ணி
தண்மையாகக் கூறும் அறிவுரைகள்
கற்றுத்தரும் கலைகள் ......
செயல்களினூடு காண்பிக்கும் திறன்கள்
நும்மையன்றி யாரிடமுண்டு ஐயா ....

சௌந்தரி

அன்புத் தாத்தா ......
ரிப்பி ரிப்பியைப் பார்த்தால் - உங்கள்
சிரித்த முகந்தான் தெரியும் தாத்தா
நீங்கள் சானுஜா வைப் பெடியா பெடியா
எனக் கூறி விளையாடிய அந் நாட்கள்
கடைசியாக சந்தித்த நாட்கள்
மனதிலே நிலைத்திருக்கிறது தாத்தா .....

சௌமியா, சௌயனா, சானுஜா
( பேரப்பிள்ளைகள்)

மண்ணகத்திலே தோன்றி
விண்ணகத்திலே மறைந்தாரே..
நீங்கள் புன்னகை செய்தாலே
எல்லோரின் மனதிலும்
கவர்ந்த வாசமே வந்து சேருமே.....
தங்க மயமாக மாறி விடுகிறதே
உள்ளத்தின் வெளிச்சமே
உங்களின் மனதிலே
குடிகொள்ளும் உறவினர்களே
செந்தழிப்பான வடிவிலே
செங்கதிரத்தாலே....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் நீடூழி வாழ்ந்தீரே....
தன்னம்பிக்கையாய் மாறியே
முத்துக்களைப் போல் காட்சி அளித்தீரே
பல்கோடி வாழ்த்தி பலகோடி வாழ்ந்தீரே.....
ஒன்றை மனதில் யோசித்தே
பொறுமையாக நல்லதை முடிப்பீரே
நீங்கள் அன்பில் குடி கொண்டே
எல்லார் மனதிலும் உறைந்திட்டீரே
இறைவனிடம் சேர்ந்தாலும்
இறையருள் கிடைத்திடுமே...
உங்களுடைய ஆத்ம சாந்தியடைய
எல்லோரும் ஒன்றுகூடி
பிரார்த்தனை செய்கின்றோம்....
பிரார்த்தனை செய்கின்றோம்.....

விண்ணகத்திலே சந்தோஷமாக இருக்க
உங்களுடைய பேரப்பிள்ளைகள்
பிரார்த்திக்கின்றோம்.

இ. இராகவி
(11வயது பேத்தி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல்சாலை

- சராசரி மனித உடம்பில் 65 சதவீதம் நீர் உள்ளது. அதேபோல யானையின் உடம்பில் 70 சதவீதமும் புழுங்களில் 80 சதவீதமும் உள்ளது.

- Iceberg எனப்படும் கடலில் மிதக்கும் பனிமலைகள் (பனிப்பாறைகள்) 150 m வரை உயரமாக இருக்கும்.

- அனேகமான மீன்கள் காற்றினால் நிரப்பப்பட்ட பையைக் கொண்டுள்ளன. இது Bladder Swim என அழைக்கப்படுகிறது, இதுவே மீன்கள் நீரில் மிதப்பதற்கு உதவுகிறது.

- அதிக உப்பான நீரில் மிதப்பது இலகுவானதாக இருக்கும் ஏனென்றால், உப்பு நீரின் அடர்த்தி அதிகமாக இருப்பதால்.

- Shower கள் இப்போதைய கண்டுபிடிப்பல்ல. அவை 2500 வருடங்களுக்கு முன்னரே புராதன கிரேக்கரால் பாவிக்கப்பட்டது.

- நாம் மூச்சு விடுவதைப் போல் மீன்கள் விடுவதில்லை, நாம் வளியிலுள்ள $O_2$ ஐச் சுவாசிக்கிறோம் ஆனால் மீன்கள் நீரில் கலந்துள்ள $O_2$ ஐச் சுவாசிக்கின்றன.

- பூனைகளின் கண்களில் கண்ணாடி போன்ற படை உள்ளது. அதுவே பூனைகள் இருட்டிலும் பார்க்கக்கூடியதாக இருக்கின்றன.

- பறவைகள் நிறங்களைப் பிரித்து உணரக்கூடியன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தூறல்களுக்கூடாக சூரிய ஒளி புகுந்து செல்லும்போது துளிகள் ஒவ்வொன்றினூடாகவும் ஒளி பட்டுமுறியும் போது ஏற்படும் ஏழு வர்ணங்களும் தான் நமக்கு வானவில்லாக தோன்றுகின்றன.
- Sun-dials என்று கூறப்படுவது தமிழில் நிழற் கடிகாரம் என்றும் சூரியக் கடிகாரம் என்றும் அழைக்கப்படுகிறது. ஆதிகாலத்தில் கிரேக்கர்கள் முதன்முதலில் பாவித்ததாகக் கூறப்படுகிறது.
- புகைப்பிடிப்பவர்களை விட புகைப்பிடிப்பவர்களுடன் இருப்பவர்களுக்கு 20 - 30 % க்கு மேலாக புற்றுநோய் அல்லது இதயநோய் வருவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன என ஆராய்ச்சிகள் கூறுகின்றன.
- சூரிய குடும்பத்தில் இருக்கும் கிரகங்களில் அதிக குறைந்த அடர்த்தி உள்ள கிரகமாக சனி உள்ளது. அதனுடைய ஈர்ப்பு விசை 0.7 ஆக இருக்கிறது. இது நீரின் அடர்த்தியிலும் விடக் குறைவாக உள்ளது.
- நமது உடலில் இருந்து தினமும் பல மில்லியன் கணக்கில் இறந்த கலங்கள் உதிர்கின்றன. ஒவ்வொரு 35-45 நாட்களில் Epider ய்வதற்கு காற்று, நீர், நிலக்கரி, எண்ணெய், வாயு என்பவற்றுடன் அணுசக்தி (Nuclear Fuel) உம் பயன்படுகிறது.
- மின்னலும் ஒரு வகை மின்சாரம் தான் ஆனால் வீட்டு மின் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுவதில்லை. மின்னல் மின்சாரம் Static Electricity என்று அழைக்கப்படுகிறது
- தொலைபேசியில் பேசும் போது Wire மூலமாக எப்படி ஒலி செல்கிறது? தொலைபேசியில் உள்ள Mic ல் பேசும் போது ஒலிசக்தி) (Sound



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Energy) மின்சாரமாக மாற்றப்பட்டு Wire மூலமாகச் சென்று மற்றைய முனையில் ஒலிபெருக்கியில் மீண்டும் ஒலிசக்தியாக மாற்றப்படுகிறது.

◈ நமது பூமி ஒரு காந்தமென்பது உங்களுக்குத் தெரியுமா ? பூமியின் தென் காந்தமுனை (Magnetic Pole) South வடதுருவத்திற்கு அருகிலும் (North Pole) வடகாந்த முனை (North Magnetic Pleo) தென் துரவத்திற்கு அருகிலும் உள்ளன.

◈ 1790 ல் துவிச்சக்கரவண்டி தயாரிக்கப்பட்ட போது அவற்றிற்கு நிறுத்திகளும் (Brake) மிதிகளும் (Pedal) இருக்கவில்லை.

◈ நாம் தரையில் நடக்கும் போது நமது காலிற்கும் தரைக்கும் இடையில் Friction எனப்படும் உராய்வு இருப்பதால் தான் எம்மால் முன்னோக்கி நடக்கக்கூடியதாக இருக்கிறது.

◈ நீலத்திமிங்கிலங்கள் யானைகளிலும் விட 25 மடங்கு நிறைகூடியனவாக உள்ளன. இவை 140 Tonne கள் நிறையுள்ளன.

◈ Britain ல் E.coli என்ற புதிய bug ஒன்று அச்சுறுத்த ஆரம்பித்துள்ளது. 026 Bacterium வகையான இது 0157 என்ற வகையான Bacterium மாதிரியே உணவு மூலம் ஏற்படும் Food Poisoning ஆகிக் குழந்தைகளையும்,
வயோதிபர்களையும் பாதிப்பதாக ஆராய்ச்சியாளர்கள் பயப்படுகிறார்கள். இதன் பாதிப்பு Scotland ல் ஏற்பட்டுள்ளது. E.coli மாட்டுக்கூட்டங்களில் அடையாளங் காணப்பட்டுள்ளது. இது இறைச்சி மூலம் மனிதர்களுக்கு, அதாவது சரியாகப் பதனிடப்படாத Burger, இறைச்சி வெட்டி வினியோகப்படுத்தும் இடங்கள் மூலம் பரவலாமென்று அஞ்சப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Air Conditioning :

- மூடிய அறையில் அல்லது ஒரு கட்டடத்தில் உள்ள வளியை, Ice ன் மேலாக Fan இலிருந்து வரும் காற்றைச் செலுத்திக் குளிரவைக்கும் முறை 19 ம் நூற்றாண்டில் அதாவதுகி.பி 1880 ல் அமெரிக்காவில் அமைந்துள்ள Madision Square Theatre ல் ஒவ்வொரு இரவுக்காட்சியிலும் நான்கு Ton கள் நிறையுடைய Ice ஐப் பாவித்து அந்தக் கட்டடத்தின் உட்பக்கத்தைக் குளிரவிட்டார்கள்.
- பின்னர் முதலாவது உண்மையான 'Air Conditioner' அமெரிக்காவில் 1902 ல் Willis H. Carrier என்ற ஆராச்சியாளரால் வடிவமைக்கப்பட்டது. இவர் வடிவமைத்த Air Conditioner உள்ளே வரும் வளியிலுள்ள ஈரப்பதனையும் தண்ணீருடன் கலக்க வைத்து அதனால் வெப்பத்தை மட்டும் கட்டுப்படுத்தாமல் ஈரப்பதனையும் (Humidity) கட்டுப்படுத்தியது.
- அதே ஆண்டில் இவரது இயந்திரம் New York ல் உள்ள Printing works of Sackett Williams என்ற நிறுவனத்தில் பொருத்தப்பட்டது. அதன் பின்னர் 4 வருடங்களுக்குப்பின் அமெரிக்கரான Stuart Crawer என்பவரால் அதற்குத் தூசைக்கட்டுப்படுத்த ஒரு உபகரணம் (Dust Filter) சேர்க்கப்பட்டு நூல் நெசவுத் தொழிற்சாலையில;(Textile Mills) பொருத்தப்பட்டது. இதன் பின்னர் தான் இந்த உபகரணத்திற்கு Air Conditioner என்ற பெயர் பாவிக்கப்படத் தொடங்கியது.
- இது 1950 ல் இருந்து தான் சிறியதான வீட்டில் பாவிக்கப்படக்கூடியதான Air Conditioner வெப்பமான நாடுகளில் பயன்படுத்தத் தொடங்கினார்கள். இப்போது Air Conditoner இன் உபயோகம் அனேகமான எல்லா நாடுகளிலும், வாகனங்களில் கூடப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Air ship : (Hovercraft)

- Air ship 24 th September 1852 ல் France நாட்டைச் சேர்ந்த Steam Engineer, ~~Md~~ Henri Giffard என்பவரால் Hydrogen ஆல் நிரப்பப்பட்ட Air ship தயாரிக்கப்பட்டு France இன் Versailles க்கு மேலாக 17 mile , 5mph வேகத்தில் செலுத்தப்பட்டது.
- இந்த ஆகாய வாகனம் 144 அடிகள் நீளமானதாகவும் 3hp (3குதிரை வேகங்கொண்ட) நீராவி இயந்திரத்தின் 11 ~~mb~~ Proppeller இன் உதவியுடன் பறந்தது.

- Petrol இயந்திரத்தின் மூலம் இயங்கும் Aluminiumj அத்தினால் தயாரிக்கப்பட்ட Air ship 1880 களில் அறிமுகமானது. இந்த Airship இலகுவில் ஏறுவதற்கு (Lift பண்ண) மிகவும் உதவியாக அமைந்தது.
- அதன் பின்னர் 1900 ல் German நாட்டு முன்னாள் இராணுவ அதிகாரியான Count Fredinand Von Zeppelin என்பவர் திடகாத்திரமான Air ship ஐப் Prototype ஆகத் தயாரித்தார். தனது பெயரையே அந்த Craft க்கு Zeppelin என்று வைத்தார்.
- இது 420 அடிகள் நீளமானதாகவும் உருளைவடிவானதாகவும் இருந்தது.
- இதில் 17ல் வாயு அடைக்கப்பட்ட பைகளில் மொத்தமாக 400000 சதுர அடி கனவளவுள்ள Hydrogen அடைக்கப்படடிருந்தது. அத்துடன் இதில் 14 hp உள்ள 2 Daimler இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருந்தன.
- Zeppelin கள் வர்த்தக சேவைக்காக 1910-1914 க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் Germany யில் விடப்பட்டது. கூடுதலாக இது உள்நாட்டில் தான் பயன்படுத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 1ம் உலக மகாயுத்தத்தில் லண்டனில் குண்டு போட முதன்முதலில் Zeppelin களs பயன்படுத்தப்பட்டன.
- 1930 களில் "Zeppelin" களில் பயணம் செய்வது Fashion ஆகி Atlantic க்கு மேலாக தலைநகர் விட்டு தலைநகருக்குப் போக இவை பயன்படுத்தப்பட்டன.
- புதிய தயாரிப்புக்களை அமெரிக்கர்களும் ஜேர்மனியர்களும் செய்யத் தொடங்கினர். இவை "பறக்கும் உல்லாச விடுதிகள்" (Flying Hotels) என்று அழைக்கப்பட்டன. இதில் ஒன்று விபத்தில் சிக்கியதால் பலர் இறக்க நேரிட்டது. 1930 ல் பிரித்தானியாவின் R101 இந்தியாவுக்குப் பறக்கும் போது விபத்துக்குள்ளானதில் Air Minister, Craft Engineer உடன் சேர்ந்து 48 பேர் மரணிக்க நேரிட்டது.
- அதன் பின்னர் 1937 ல் 804 அடிகள் நீளங்கொண்ட "Hindenburg" என்ற உலகின் பெரிய Air ship Newjersey ல் தரையிறங்கிய போது Hydrogen தீப்பிடித்த காரணத்தால் அது வெடித்து அதில் பயணம் செய்த NewYork ஐச் சேர்ந்த 35 பேர் மாண்டதன் பின்னர் இந்த Air ship பயணம் ஒரு முடிவுக்கு வந்தது.

## Aircraft (விமானங்கள்)

- 20 ம் நூற்றாண்டில் வெற்றிகரமாக வடிவமைத்து உருவாக்கப்பட்ட பறக்கும் விமானங்கள் தான் இதுவரையிலான கண்டுபிடிப்புக்களில் மக்கள் வாழ்க்கையில் அதிவிஷேசமான மாற்றத்தை ஏற்படுத்தியது எனலாம். விமானம் சரியான வடிவத்தைப் பெற பல காலங்கள் இழுபட்டிருந்தாலும் அது வடிவம் பெற்ற பின்னர் சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கம் மிகப்பெரிய அளவில் அறியப்படக்கூடியதாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- முதல் உண்மையான விமானம் 1903 ல் Wright சகோதரர்களான Orville, Wilborn இனால் அறிமுகப்படுத்தப்பட்டபோது இயலாத காரியம் என்று மறுக்கப்பட்டு பின்னர் 1905 ன் பின்னர் தான் பொதுமக்களின் கவனம் அவர்களில் திரும்பியது.

- 1909 ல் நடைபெற்ற முதலாவது சர்வதேச விமானக் கண்காட்சியில் 8 விதமான விமானங்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டன. அவற்றில் 6 ஐரோப்பாவில் வடிவமைக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்டவை, இந்த ஆண்டிலேயே முதலாவது கடலுக்கு மேலான பறப்பும் செய்யப்பட்டன. ஆங்கிலக்கால்வாயை Lavis Bleriot என்ற France நாட்டைச் சேர்ந்த விமான ஓட்டி Bleriot XI Monoplane ல் கடந்து சாதனை செய்தார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விரு

சின்னையா + செல்லம்மா

**சிவானந்தம்**

ஜெயலக்ஷ்மி

இரஞ்சிதமல

செல்லமாறன்
+
குமுதா

சௌமியா
சௌயனா
சானுஜா

மாதங்கி
+
சுந்தரலிங்கம்

ஆர்த்தி
பொழில்மதி

இளந்தீர
+
தர்மிக

ஆரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருத்தி

இராசையா + பாக்கியலஷ்மி

ஞ்சிதமலர் | நடராஜசுந்தரம் | கமலேஸ்வரி | இராஷேஸ்வரி | ஜோதிமலர் | பத்மாவதி

இளந்தீரன் + தர்மிகா → ஆரி

தார்மிகா + சுரேஷ்கண்ணா → ஜினித்திரா, பிரயோதயன்

சௌந்தரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளங்கனிந்த நன்றிகள்



அன்பிற்கு இலக்கணமாக வாழ்ந்து கண்ணை இமைகாப்பது போல எமைக் காத்து ஆலமரமாக நிழல் தந்த எமது பாசமிகு தந்தையே! எமது தந்தையின் மரணச் செய்திகேட்டு இரக்கமுடன் ஓடிவந்து எம் துயரிற் பங்குகொண்டது மட்டுமன்றி, கிரியைகளிலும், இறுதி யாத்திரையிலும் பங்கு கொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் அனுதாபங்களைத் தெரிவித்து எமது துன்பத்தைப் பகிர்ந்து கொண்ட அன்பர்களிற்கும், அந்தியேட்டி, சபிண்டீகரணத்தில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் எமக்கு உதவி புரிந்தவர்களுக்கும், எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org